இயல் 5

# பெண் கவிஞர்களுள் பெண்ணிய நோக்கு நிலை வேறுபாடு



# இயல் 5

# பெண் கவிஞர்களுள் பெண்ணிய நோக்கு நிலை வேறுபாடு


5.0 முன்னுரை

5.1 பொருளாதாரம்

5.2 வாழ்விடச்சூழல்

5.3 தொகுப்புரை

# இயல் 5

# பெண் கவிஞர்களுள்
# பெண்ணிய நோக்கு நிலை வேறுபாடு

## 5.0 முன்னுரை

சமுதாய அமைப்பின் தோற்றம் மனிதனின் வாழ்வியல் முறையில் பெரும்மாற்றத்தையும் வளர்ச்சியையும் ஏற்படுத்தியது. மனிதன் நாகரிகமாக வாழ்வதற்கும் வளர்ச்சி குறித்து சிந்திப்பதற்கும் சமுதாயம் அடித்தளம் அமைத்துக் கொடுத்தது. சமுதாய வளர்ச்சிக்காக பல அறிஞர்கள் பாடுபட்டார்கள். அனைத்து அறிஞர்களும் ஒரே துறைசார்ந்தோ அல்லது ஒரே செயல் குறித்தோ சிந்திக்கவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான சிந்தனையை சமுதாயத்திற்கு வழங்கினார்கள். இதன் அடிப்படையிலேயே சமுதாயம் அறிவியல், பொருளியல், தத்துவவியல், அரசியல், ஆட்சியியல் எனப் பல்வேறான துறைகளைக் கண்டுள்ளது.

சமுதாய வளர்ச்சியில் பல்வேறு துறைகளும் பெரும் பங்கு வகிக்கின்றன. அதன் ஒவ்வொரு துறையும் பல்லாயிரக்கணக்கான அறிஞர்களை இன்று வரை கண்டு வந்துள்ளது. இந்த அறிஞர்களுள் ஒரே துறையைச் சார்ந்தவர்கள் இருந்த போதிலும், ஒவ்வொருவரின் சிந்தனையும் மாறுபாடு கொண்டதாகவே இருந்து வந்துள்ளது. மாறுபாடான சிந்தனையே புதிய கருத்துகளை வழங்குவதாக அமையும். இதன் அடிப்படையிலேயே ஒவ்வொரு துறையும் பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. அவ்வாறான உட்பிரிவுகளின் மூலம் உருவானதுறைகள் அறிவியல் துறையில் அணுவியல், உயிரியல், தாவரவியல், வேதியியல், இயற்பியல் போன்ற உட்பிரிவுகளைப் பெற்று வளர்ச்சி கண்டது. இது போல் அனைத்துத் துறைகளிலும் பல்வேறான உட்பிரிவுகள் தோன்றி வளர்ச்சி ஏற்பட்டது.

சமுதாய வளர்ச்சியில் ஒவ்வொரு துறையின் உட்பிரிவுகளும் மிகப்பெரும் சக்தியாக வலுப்பெற்றது. இந்த உட்பிரிவுகளின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மாறுபட்ட சிந்தனைகளே அடிப்படையாக அமைந்துள்ளன. உடன்பாட்டுக் கொள்கைகளை விட மறுத்தளித்தல் கொள்கையே வரலாற்றில் மிகப் பெரும் மாற்றத்திற்குக் காரணமாக அமைந்து வந்துள்ளதை வரலாறுகள் மூலம் அறியமுடியும். இந்த மாறுபட்ட சிந்தனை, சமுதாயத்தின் அனைத்துத் துறைகளுக்கும் பொதுவான ஒன்றாகவே இருந்து வருகின்றது.

பெண்ணியம் பெண்களின் வாழ்வைச் சுதந்திரமாக ஆக்கவும் அவர்களின் விடுதலைக்காகவும் சமுதாயம் ஏற்படுத்திய ஒரு அமைப்பாகும். அதிகார வர்க்கத்தாலும் அடக்குமுறைச் சக்திகளாலும் அடிமைப்பட்டிருந்த பெண்சமுதாயம் எழுச்சி பெற்று விடுதலைக்காகப் பாடுபடத் தொடங்கியது. சமுதாய அமைப்பில் தோன்றிய இயக்கங்கள் அனைத்தும் ஒத்த கருத்தைக் கொண்டவர்களை மட்டுமே கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாகவே பெரும்பான்மை என்ற கருத்தாக்கம் தோன்றியது எனலாம். ஒவ்வொரு இயக்கத்திலும் கருத்து முரண்பாடுகள் இயல்பான ஒன்றாகவே இருந்து வருகின்றது. அதுபோல் பெண்ணிய இயக்கமும் அது தோன்றிய காலம் முதல் முரண்பாடுகளையும் மாறுபட்ட கருத்துகளையும் கொண்டதாகவே வளர்ந்து வருகின்றது.

பெண்ணிய இயக்கத்தின் நோக்கம் ஆண்களை நோக்கியதாக அமைந்துள்ளது என்பது அதன் பொதுக் கொள்கையாகும். ஆனால் ஆண்களிடம் எதை எதிர்பார்ப்பது அல்லது ஆண்களை எப்படி நடத்துவது என்பதில் பெண்ணியலாளர்களிடம் ஏராளமான கருத்து முரண்பாடுகள் உள்ளன. ஆண்களைப் பெண்கள் அடக்கி ஆள வேண்டும் என்பதும் பெண்களுக்கு ஆண்கள் கட்டுப்பட்டு வாழ வேண்டும் என்பதும் ஒரு கருத்தாக்கம் ஆகும்.

ஆண்சமுதாயத்தை முழுமையான எதிரியாகக் கொள்ள வேண்டும் என்பதும் ஆண்களை முழுமையாக சமுதாயத்தில் இருந்து அப்புறப் படுத்த வேண்டும் என்பதும் ஒருசாராரின் பெண்ணியக் கருத்தாகும். இன்னும் சில

பெண்ணியலாளர்கள் பெண்களின் மீதான ஆண்சமுதாயத்தின் அடக்குமுறை பாலியல் உறவில்தான் தொடங்கு-கின்றது. எனவே பாலியல் உறவு என்பது மாறுபட்டதாக இருக்கத் தேவையில்லை. பெண்கள், பெண்களுடன் மட்டுமே பாலுறவு கொள்ள வேண்டும் என்ற கருத்தை முன் வைக்கின்றது. இதனால் இன வளர்ச்சி தடைபடும் என்பதை அறிந்த போதும், அது பற்றிய கவலை கொள்ளத் தயாரான நிலையில் இல்லை. தாய்மை நிலையை இந்த தீவிரவாதப் பெண்ணியம் முழுமையாக மறுக்கின்றது.

மிதவாதப் பெண்ணியலாளர்கள் பெண்ணியம் குறித்து இது போன்ற தீவிரவாதப் போக்கைக் கொண்டிருக்க வில்லை. அவர்கள் ஆண்கள் இல்லாமல் சமுதாயம் வளர்ச்சி பெற முடியாது என்பதை உணர்ந்து கொண்டவர்களாக உள்ளார்கள். ஆண்கள் இல்லாமல் பெண்கள் சமுதாயத்தில் வாழ்வது தேவையற்ற வாழ்க்கையாகிவிடும் என்ற நம்பிக்கை உடையவர்கள். பெண்களின் உணர்வுகளையும் அவர்களின் உரிமை-களையும் ஆண் சமுதாயத்திடம் எடுத்துரைக்க வேண்டும். ஆண் சமுதாயத்தை உளவியல் ரீதியாக மாற்றம் கொள்ளச் செய்ய வேண்டும். பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். பெண்கள் உயிர்சாந்த ஓர் இனம் என்பதைப் புரியவைக்க வேண்டும் என்பதும் பெண்ணியலாளர்-களின் கொள்கையாக இருந்து வருகின்றது.

பெண்ணியம் குறித்த கருத்தாக்கங்களிலும் பெண்ணியத்தின் செயல்திட்டங்களிலும் பெண்கவிஞர்களின் கருத்துகள் மாறுபாடு-கொண்டதாகவே இருந்துவருகின்றது. இதற்கான காரணங்கள் பெண் கவிஞர்களுக்கு ஏற்படும் வாழ்க்கை அனுபவங்களே ஆகும். மனித வாழ்வில் ஒவ்வொருவருக்குமான அனுபவங்கள் வெவ்வேறானதாகவே அமைகின்றது.

வாழ்க்கை அனுபவங்கள் ஒருவரின் வாழ்விடச் சூழலையும் அவர்களின் பொருளாதார நிலையையும் அடிப்படையாகக் கொண்டே அமைகின்றது. பெண் கவிஞர்களுள் பெண்ணிய நோக்கு நிலை வேறுபாடுகள் என்னும் இந்த இயல்

1. பொருளாதாரம்

2. வாழ்விடச் சூழல்

என்னும் உட்தலைப்புகளில் விளக்கப் பெறுகின்றது.

## 5.1 பொருளாதாரம்

மனிதவாழ்வில் அவனது சமூகத்தகுதியை நிலைபெறச் செய்வது அவனது பொருளாதார நிலையே ஆகும். இந்தப் பொருளாதார நிலையைப் பெண்களுக்குச் சமுதாயம் அறிமுகம் செய்யவே இல்லை என்றே கூறலாம். பெண்கள் சமூகக் கட்டுப்பாடுகளால் அடக்கி-வைக்கப்பட்டார்கள். பொருளாதார நிலையை முழுமையாக ஆணிடம் ஒப்படைத்துவிட்டு அதன் மன அழுத்தத்தில் இருந்து விலகிநிற்பதை ஒரு பாதுகாப்பாகவே பெண்கள் கருதினார்கள். ஆனால் சொத்துரிமை இருந்தும், வேலை வாய்ப்பின் மூலமே பொருளாதார உறுதித் தன்மையைப் பெறுவது பெண்ணியத்தின் அடிப்படை உரிமை என்பதைப் பெண்ணியம் கோட்பாடாகக் கொண்டது. பெண்களை வீட்டு வேலைகளில் மட்டும் ஈடுபடுத்திவைப்பது “பெண்களை அடிமைப்-படுத்தும் மற்றொரு வகையாகும். அதற்கு ஊதியமும் இல்லை சமுதாய ரீதியில் பெண்களுக்கு அது பல பிரச்சினைகளை உருவாக்கும் தன்மை கொண்டவை”.[1] இதன் அடிப்படையிலேயே பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டுள்ளது. “அடுக்களைச் சேவகிகளுக்குக் கல்வி கற்கும் உரிமைகூட அரிதாகிப்போனது”.[2] இதனால் பெண்களுக்கு பொருளாதாரநிலைப்பாடு குறித்த கருத்தாக்கம் வலுப்பெறத்தொடங்கியது.

பெண்ணியம் கொள்கையின் அடிப்படையில் மிதவாதப் பெண்ணியம், தீவிரவாதப் பெண்ணியம், சமதர்மப் பெண்ணியம் என்று பல்வேறு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதற்கு அவற்றிற்கிடையிலான கொள்கை முரண்பாடுகளும் அணுகுமுறையின் முரண்பாடுகளுமே காரணமாக அமைகின்றன. பெண்ணியத்தின் பொருளாதாரக் கொள்கைகளும் முரண்பாடுடையதாகவே உள்ளது. “மிதவாதப் பெண்ணியலார் குடும்ப அமைப்பை ஏற்றுக்கொண்டு சமூகப் பழக்க

வழக்கங்களில் மாறுதல்களைக் கொண்டு வர விரும்பினர்".[3] ஆனால் சமதர்மப் பெண்ணியம் பெண்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுதத்தருவதில் கவனம் செலுத்தியது. மேலும் பெண்கள் வேலைவாய்ப்பில் "சமஊதியம், சமகல்விவாய்ப்பு, சமவேலைவாய்ப்பு இவற்றைப் பெண்களுக்குப் பெற்றுத்தருதல்"[4] ஆகியவற்றைத் தனது முக்கியக் கொள்கையாகக் கொண்டிருந்தது. ஆனால் தீவிரவாதப் பெண்ணியம் இதுபோல் ஆண்கள் உடனான சமாதானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. பெண்கள் மீதான சமூகமதிப்புகளையும் சமுதாயக் கட்டுப்பாடுகளையும் உடைத்தெறிந்தது. சமுதாயம் முழுவதும் பெண்கள் மட்டுமே உள்ளவர்களாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டுள்ளது. "பெண்ணாட்சியே எதிலும் எங்கும் என்ற நோக்குடைய சமுதாயத்தை உருவாக்குவதே அவர்களின் ஒன்றுபட்ட குறிக்கோளாகும். அதற்கு முதற்படியாகப் பெண்களால் நடத்தப்படும் வணிகங்கள், உணவகங்கள், புத்தகக்கடைகள், பெரிய அளவிலான அலுவலகங்கள், நல்வாழ்வு மையங்கள், போன்றவற்றை தோற்றுவிப்பதில் அதிதீவிரம் காட்டினர்".[5] பெண்ணியத்தின் தீவிர முயற்சியின் காரணமாகப் "பெண்கள் இயக்கம் அரசியல் துறையில் மட்டுமல்லாது பொருளாதாரத் துறையிலும் சமுதாயத் துறையிலும் கூட பல மாபெரும் சாதனைகளை ஈட்டினார்கள்".[6]

பெண்கள் பொருளாதார நிலையில் மேன்மை அடைந்துவிட்டால் ஆணாதிக்கத்தின் அதிகாரம் பாதிக்கப்படும். இதனால் குடும்ப உறவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது ஆண் சமுதாயம். "ஆணாதிக்கம் ஆண்-பெண் உறவில் அமைவதற்கு அடிப்படையாகச் செயல்பட்டவைகளுள் ஒன்று வேலைப் பிரிவினையாகும்"[7] என்பதைக் கவனத்தில் கொண்டுள்ளது பெண்ணியம்.

பெண்கள் பொருளியல் சார்ந்த பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளார்கள். அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கான ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

சமுதாயம் ஏற்படுத்தித்தந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பெண்ணியம் சரியான அளவில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.

*"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்*
*எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்*
*இளைப்பில்லை காணென்று கும்மியடி"*[8]

என்ற பாரதியாரின் கருத்தை பெண்கள் நிலைநாட்டிக் கொண்டுள்ளார்கள்.

பெண்கள் அவர்களின் பொருளாதார நிலை குறித்து படைப்புகளின் மூலமாக வெளிப்படுத்துகின்றார்கள். அவ்வாறு வெளிப்படுத்தும் கருத்துகள் ஒரே கருத்துடையதாக இருப்பதில்லை. அவர்களின் வாழ்க்கைத் தன்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. இதை கவிஞர் திலகபாமா தனது கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

*"செல்வத்தைக் கொடுத்து*
*செல்வத்தை மணந்தும்*
*எப்போதும் கையேந்தல்கள்*
*பிறந்த வீட்டில்*
*நான் மகாலட்சுமியாய்*
. . . . . . . . . .
*செல்வத் தோடிருந்தும்*
*நளினங்களைத் தொலைத்து*
*நான் வீற்றிருப்பது*
*எரியும் நெருப்பூக்களில்*
. . . . . . . . . .
*தந்தை வழிச் சமூகம்*
*பெண்ணாய் பூட்டிய*
*புராதனப் பெட்டிக்குள்ளிருந்து*
*தாயாண்மை சமூகம் நிறுவ*
*மனுசியாய் எழுந்து*
*செல்வமென மாறிப்பரவுவேன்"*[9]

இக்கவிதை செல்வச்செழிப்பில் இருக்கும் பெண்ணைக் குறிப்பிடுகின்றது. ஆனால் செல்வத்துடன் இருந்தபோதும் அதனால் பயனில்லாத நிலையையும் அந்தக் கட்டுப்பாட்டிலிருந்து வெளிவரத் துடிக்கும் நிலையையும் வெளிப்படுத்துகின்றது.

பொருளாதார நிலையின் காரணமாகக் கணவனும் மனைவியும் வேலைக்குச் செல்லவேண்டிய நிலை சமுதாயத்தில் உள்ளது. ஆணும் பெண்ணும் சரியான அளவில் சம்பாத்தியம் பெற்றாலும், பெண் ஆணுக்கு அடிமையாகவே இருக்கின்றாள் என்பதைக் கூறுகின்றார் கவிஞர் குளோரி கிறிஸ்டோபர்.

*"அலுவல் முடிந்து அயர்வாய்த் தோன்றும்*
*தலைவன் தலைவி இல்லின் கண்ணே*
*சேர்ந்து வந்தும் சோர்வு நீங்க*
*நேர்ந்த கடமைப் பெண்ணுக் கென்றே*
*நிலவும் கருத்தை நீக்க வென்றே*
*உலவும் எண்ணம் ஒன்றாய் சேர்ந்து*
*வடுவாய் எந்தன் மனதில் பதிந்ததால்"*[10]

என்ற இக்கவிதையில் வேலைக்குச் செல்லும் பெண்களின் நிலையைக் குறிப்பிடுகின்றார். பொருளாதார நிலையில் பெண் உயர்வு பெற்றிருந்தாலும் அவள் கணவனுக்கு அடிமையாக இருப்பதை இங்கே பதிவு செய்கின்றார் கவிஞர்.

*"பொறியியல் துறையில் புகுந்து பெண்கள்*
*சரிநிகர் சமானமாய் சாதித்து விடுதலைக்*
*கண்டும் சமூகக் கண்கள் அவர்களை*
*வேண்டும் என்றே வெறுப்பது ஏனோ?*
*சொந்தக் காலில் நிற்கும் அளவில்*
*விந்தை மகளிர் விளங்கினர் இன்றே"*[11]

என்ற இக்கவிதையில் கவிஞர் உயர்கல்வி பெற்று உயர்வான பதவியில் அமர்ந்தாலும் சமுதாயம் பெண்களுக்கான மதிப்பை வழங்குவதில்லை

என்பதைக் குறிப்பிடுகின்றார். இதனால் அவர்கள் தொடர்ந்து போராட வேண்டும் என விரும்புகின்றார் கவிஞர். ஆனால் பெண்கள் இதை உணராமல் இன்னும் அடுப்படி வேலையில் மூழ்கி உள்ளார்கள். இதை தனது கவிதையில் குறிப்பிடுகின்றார் கவிஞர் விஜிகலா,

"*அடுப்படியில் கிடந்து*
*அனலில் வெந்து*
*அடி உதைபட்டு அங்கங்கள் நொந்தும்*
*அடுக்களைப் பூனைகளாய்*
*அழிந்து கொண்டிருக்கும் பெண்கள்*"[12]

ஆண் பெண் இருவருடைய வாழ்விலும் திருமணம் முழுமையை ஏற்படுத்துகின்றது. ஆனால் இந்தத் திருமணம் ஆண் பெண் இருவருக்கும் மாறுபட்ட அனுபவத்தைக் கொடுக்கின்றது. பெண்களுடைய திருமணத்தைப் பொருளாதாரமே உறுதிசெய்கின்றது. பெண் பணிக்குச் சென்று வருமானம் ஈட்டினால் பெற்றோர்களே அப்பெண்ணின் வாழ்வை அழித்துவிடுகின்றார்கள். இதை

"*கல்யாணத் துறவு பூண்டு*
*பெற்றோர்க்கு*
*முதல்தேதி அமுதசுரபிகளாய்*
*வாழ்ந்து கொண்டு இன்னும் நம்மிடை*
*எத்தனை மணிமேகலை*"[13]

என்ற கவிதையில் பதிவு செய்கின்றார் கவிஞர் வைரமுத்து.

வரதட்சணை கொடுக்கமுடியாமல் திருமணம் தடைபட்டு முதிர்கன்னிகளாய் வாழ்க்கை முழுதும் வாழும் பெண்கள் ஏராளமாக உள்ளார்கள்.

பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள் சமுதாயத்தில் நிறைந்து காணப்படுகின்றார்கள். அவர்கள் தங்களின் அன்றாட வாழ்வை கடத்துவதற்காக மிகப் பெரும் போராட்டம் நடத்துகின்றார்கள் என்பதைத்

தனது ‘வறுமையின் நிறம்’ என்ற கவிதையில் பதிவு செய்கின்றார் கவிஞர் சுகிர்தராணி.

*“தாழ வளைந்த மரத்தின்*
*கிளையினில் தொங்கும் தூளிக்குள்*
*கண்மூடி விழித்திருக்கிறது*
*தொப்புள்கொடி உலராத சிசு*

*உடல் இரண்டாய் மடிய*
*கணுக்கால் புதைந்த சேற்றில்*
*நடுவிரலால் ஊன்றி நடுகிறாள்*
*பசுமை ததும்பும் பயிர்களை*

*கண்களிலிருந்து வழியும் நீர்*
*நெற்றியின் மேடேறி*
*தலைமயிர்களை நனைக்கிறது*

*நைந்த ரவிக்கையின் கிழிசலை*
*மறைக்கத் தோற்குமவளின் தேகம்*
*பச்சை ரணமாய்த் துவள*
*பின்நோக்கியே நடக்கின்றன கால்கள்*
*புளித்த கஞ்சியும் தீர்ந்துவிட*
*இரா உணவுக்காய் யோசனையில் ஆழ்கிறாள்”*[14]

என்ற இக் கவிதையில் பொருளாதார நிலையை வெளிப்படுத்துகின்றார். இக்கவிதை கவிஞரின் வாழ்விடச் சூழலையும் வெளிப்படுத்துகின்றது. வாழ்க்கையின் அனுபவங்கள் படைப்புக்களில் இயல்பாக வெளிப்படும் என்பதை உணர்த்துவதாகவே அமைந்துள்ளது இக்கவிதை.

பொருள் நிறைந்தவர்கள் முட்டாள்களாக இருந்தாலும் அவர்களுக்கு மதிப்பும் உயர்வும் எளிதாகக் கிடைத்து விடுகின்றன. திறமை உள்ளவர்கள் பொருளாதாரத்தில் பின் தங்கி இருந்தால் அவர்கள் முட்டாள்களுக்கு அடிமையாக வேண்டிய நிலை உள்ளது என்பதைக் கவிஞர் வைகைச் செல்வி தனது கவிதையில் பதிவுசெய்துள்ளார்.

“நான் அடிமையாக இருப்பதினால்
தூரத்தில் நின்று வேடிக்கை பார்க்கிறேன்
அங்கே அந்த விருந்தில்
எனது நேரங்கள்
சொட்டுச் சொட்டாக
மதுக் கிண்ணத்தில் இறங்குகின்றன
அன்று
நீர் வீழ்ச்சியைப்போல் சுதந்திரமாக
பொங்கிச் சொரிந்த என் மணித்துளிகள்
இன்று
கருங்கற்களாக
அவர்களின் வாசலில்
உறைந்து கிடக்கின்றன
விலையுயர்ந்த என் கால ஆடை
களவாடப்பட்டதால்
ஆதாமைப்போல்
மரங்களின் மறைவில்
ஒளிந்திருக்கிறேன்
அங்கே
எனது நிமிடங்களை எடுத்து
காலத்தறியில்
முட்டாள்களுக்கு
கையுறை செய்கிறார்கள்”[15]

பொருளாதாரத்தில் உயர்வான நிலையில் இருப்பவர்கள் சுற்றுப்புறச் சுத்தம், சுகாதாரம் ஆகியவற்றிற்கு மதிப்பளிப்பார்கள். ஆனால் பின் தங்கிய மக்கள் பசியால் வாடும்போது உண்ணும் உணவில்கூட சுத்தம் பார்க்க முடியாது. குப்பையில் கிடக்கும் பொருள்கூட பிச்சைக்காரனுக்கு உணவாகின்றது. பொருளாதாரத்தில் நடுநிலையில் உள்ள மக்களின் வாழ்வை மிகச் சரியாக வெளிப்-படுத்துகின்றார் கவிஞர் சல்மா தனது ‘புழு’ என்ற கவிதையில்

*“கடும் பசியுடன்*
*நான் அருந்தவிருந்த உணவில்*
*மிதந்து நெளிகிறது புழு*

*பசிய மிருதுவான உடலோடு*
*நெளியும் அதனுடன்*
*விரோதம் கொள்ள*
*ஏதுமில்லை*
*எனினும் தங்கிவிடுகிறது*
*கொஞ்சம் அருவெறுப்பு*

*அதனை விலக்கிச்*
*சாப்பிடப் பழகினாலும்*
*தினமும் ஊர்ந்துவருகிறது என்னை நோக்கி*
*தன் சாதுவான தோற்றத்துடன்*

*இன்று நான் அதனைச் சகிக்க*
*கற்றுக் கொண்டிருக்கிறேன்*

*பிறகு வந்த காலங்களில்*
*அது வளர்ந்து உருமாறி*
*அட்டைப் பூச்சியாய்*
*என் மீதேறி ஊர்ந்து கொண்டிருக்கிறது*
*தன் உணவை என் உடலிலிருந்து*
*உறிஞ்சியபடி*
*என் குரல்வளையை பற்றும்*
*சாத்தியங்களுடன்*
*என்னை அச்சுறுத்தியபடி”*[16]

இக்கவிதையில் உணவில் புழு இருந்தாலும் அதனை ஒதுக்கி விட்டு வாழும் மக்களின் நிலையை வெளிப்படுத்துகின்றார் கவிஞர்.

மனித வாழ்க்கையில் பணமும் பொருளாதாரமும் மட்டுமே வாழ்க்கையில்லை. அவை மனிதனுக்கு முழுமையான மகிழ்ச்சியை வழங்கி விட முடியாது. வாழ்க்கையின் நிறைவு மனதால் மட்டுமே உள்ளது.

ஒவ்வொருவரின் வாழ்விலும் அவரவர்களுக்கான தேவைகள் வெவ்வேறானவைகள் அவற்றை பணத்தால் நிறைவு செய்து விட முடியாது என்பதையும் கவிஞர்கள் பதிவு செய்கின்றார்கள்

பொருளாதார நிலையை உணர்த்துவதற்காகவே கம்பீரமாகக் கட்டி எழுப்பப்படுகின்றன அடுக்குமாடிக் கட்டிடங்கள்; ஆனால் அவற்றைச் சடலங்கள் எனக் குறிப்பிடுகின்றார் கவிஞர் கனிமொழி

*"வெளிறிய சடலங்களாய்ச்*
*சமைந்து வெறிக்கின்றன*
*அடுக்கு மாடி வீடுகள்*
*காற்றில் அலையும்*
*துணிகளையும்*
*எப்போதாவது கூச்சலிடும்*
*குழந்தைகளையும் தவிர*
*சந்தடி ஏது?"*[17]

என்ற இக்கவிதையில் அடுக்குமாடி வீடுகள் மயான அமைதியோடு இருக்கின்றன. அங்கு மனிதன் மகிழ்ச்சியாக வாழும் சூழல் இருப்பதில்லை என்கின்றார். மகிழ்ச்சி மாடிவீட்டில் இருப்பதில்லை என்பதைப் பதிவுசெய்கின்றார் கவிஞர்.

கிராமச்சூழலில் வாழும் மனிதன் நகர்ச் சூழலில் வாழமுடியாது. அவனுக்கான வசதிகளைச் செய்து கொடுத்தாலும் கிராமச் சூழலில் சுதந்திரமான வாழ்க்கை வாழவே விரும்புவான். வெற்றிலை எச்சிலைத் துப்ப இடமில்லாத நகர வாழ்வு வேண்டாம் என்பதாகக் கூறுகின்றார் கவிஞர் தமிழச்சி தங்கப்பாண்டியன். தனது 'வனப்பேச்சி' கவிதையில்

*"சுருண்டிருக்கும் சர்ப்பமென*
*அவசரம் புதைந்திருக்கும்*
*இந்நகரத்தின் எந்த வீட்டில்*
*குழந்தைக்கான ஒரு தூளிச் சேலையும்*
*வயது முதிர்ந்தவர்களுக்கான சுருக்குப்பையும் இருக்கிறதோ*

*அங்குதான் விருந்தினளாக வருவேன்*
*என்ற அடம் வனப்பேச்சிக்கு*
*இறுக்கிக் கட்டின இடுப்புத்*
*தடத்தினைத் தடவியவாறு*
*சாப்பாட்டு மேசையில் அமரக்கூடாது*
*கறுத்த கெண்டைக்காலினை ஆட்டாது*
*அடுத்தவரோடு பேச வேண்டும் என*

*ஏகப்பட்ட முஸ்தீபுகளுடன் நான்*
*அழைத்துச்சென்ற அந்த வீட்டின் முன்*
*திண்ணையில்லை*
*வெற்றிலை எச்சிலை*
*எப்படித் துப்ப என்ற*
*பிலாக்கணத்துடன் திரும்புகையில்*
*வாசல் கூர்க்கா மட்டுமே*
*பிடித்திருந்தாகச் சொன்னாள்*
*பீடிக்காகவும் காவலுக்காகவும்*"[18]

பொருளாதாரம் குறித்து கவிஞர்களுக்குள் மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. இது போன்ற மாறுபட்ட சிந்தனைகளுக்கு கவிஞர்களுக்கு கிடைக்கும் வாழ்க்கை அனுபவங்களே காரணமாக அமைகின்றன.

பொருளாதாரம் வாழ்க்கை நிலையை மாற்றி அமைக்கின்றது. இதன் தாக்கம் அவரவர் வாழ்க்கையில் ஏதாவது ஒரு விதத்தில் வெளிப்படுகின்றது. படைப்பாளர்களின் வாழ்க்கையிலும் பொருளாதாரம் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும். அவ்வாறான பாதிப்புகள் அவர்களின் படைப்புகளில் வெளிப்படும். ஒவ்வொரு படைப்பாளரின் அனுபவங்களும் மாறுபாடுடையதாகவே வெளிப்படுகின்றது. இதன் மூலம் பொருளாதாரம் பல்வேறான மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதை அறியலாம்.

"பொருளாதாரப் பிரச்சினைகளுக்காகப் போராடுவது பெண்-களுக்குப் பெரிதும் பிற போராட்டங்களில் ஈடுபட தைரியத்தைக் கொடுத்துள்ளது. அதன் விளைவாக மனைவியை அடித்துக்

கொடுமைப்படுத்துவது ஆண்களிடம் மண்டியுள்ள குடிப்பழக்கம் பெண்-களுக்குத் தொந்தரவு கொடுத்தல், பிறராலும் கற்பழித்தல் ஆகியவற்றை எதிர்த்துப் போராடும் தைரியத்தைக் கொடுத்துள்ளது”[19] என்பதைப் பெண்ணியம் ஆண் சமுதாயத்திற்கு உணர்த்தியுள்ளது. பொருளாதாரப் பிரச்சினைகளின் காரணமாகப் பெண் சமுதாயமே அழியும் ஆபத்து உள்ளது. சமுதாயம் இந்த உண்மையை உணர்ந்திருந்த போதும் அதை ஒப்புக்கொள்ள மறுத்து வருகின்றது.

பெண்ணியம் இன்று எதிர்கொண்டுள்ள பிரச்சினை பெண் சிசுக் கொலையாகும். பெண்ணினத்தை அழிக்கும் இந்தச் சமுதாயக் கொலைகள் சமுதாயத்தால் அங்கீகாரம் பெற்றுள்ளன. இந்தச் செயல் தொடர்ந்து நீடித்தால், பெண்சமுதாயம் ஒரு நிலையில் முழுமையாக அழியும் நிலை ஏற்படும். பெண் சமுதாயத்திற்கு எதிரான இச்செயல் தொடர்ந்து நீடிப்பதற்கு பொருளாதார நிலையே காரணமாகும். பெண்களுக்கு முறையான பாதுகாப்பை வழங்குவதற்கும் வளர்ச்சியடைந்த பெண்களுக்குத் திருமணம் செய்துவைப்பதற்கும் பொருளாதாரத் தேவை மிகுதியாகத் தேவைப்படுகின்றது. இதன் காரணமாகவே சமுதாயம் பெண்சிசுக் கொலைகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது. இதன் ஒரு பகுதியாகப் பெண்சிசுக் கொலைகளை, பெண்களைக் கொண்டே நிறைவேற்றி வருகின்றது. இது பெண்களுக்கு எதிராகச் சமுதாயம் மேற்கொண்டுவரும் அடக்குமுறைச் செயலின் உச்சகட்டம் என்பது புலனாகும்.

பெண்சமுதாயத்தின் பாதுகாப்பாக இருப்பது பொருளாதார நிலையாகும். ஆனால் அந்தப் பொருளாதாரப் பாதுகாப்பைப் பெண் சமுதாயம் இன்னும் முழுமையாக கைப்பற்றவில்லை. மேலும் அப்பொருளாதார பாதுகாப்பைக் கைப்பற்றுவதில் பெண்ணிய இயக்கங்களுக்குள்ளாக முரண்பாடுகள் உள்ளன. பொருளாதார அதிகாரத்தையும் குடும்பத் தலைமையையும் ஆண்களிடம் இருப்பதையே பாதுகாப்பாக உணரும் பெண்கள் உள்ளனர். அவர்கள் பெண்ணியம் சார்ந்தும் பெண் விடுதலை குறித்தும் மாறுபட்ட கொள்கைகளையும்

சிந்தனைகளையும் கொண்டுள்ளனர். இது போன்றவர்கள் பெண்ணியக் கொள்கைகளில் ஆரம்ப நிலையில் உள்ளவர்கள் ஆவார்கள். இதனால் இவர்கள் சமுதாயக் கட்டுப்பாடுகளில் இருந்தும் சமுதாயம் கற்பித்துள்ள பெண்மை குறித்த கருத்துகளில் இருந்தும் மாறுபடாதவர்களாகவும் உள்ளார்கள்.

ஆணாதிக்கச் சமுதாயத்தின் மீது பெண்ணியம் கொண்டிருக்கும் எதிர்ப்பையும் போர்க் குணத்தையும் தொடக்கநிலைப் பெண்ணியலாளர்கள் கொண்டிருக்கவில்லை. இது ஆணாதிக்கத்தையும் பெண்மை மீதான ஆண்களின் அதிகாரத்தையும் ஏற்றுக்கொள்ளும் நிலையாகும். பெண்களின் இந்த நிலைப்பாடே பெண்களை முழுமையாக அடிமைகளாக்கும் தொடக்கமாகும். இது போன்ற தொடக்க நிலைப் பெண்ணியலாளர்கள் பெண்ணியத்திற்கே எதிரானவர்கள் எனக் கருதுகின்றது பெண்ணியம். இது போன்ற நிலைப்பாட்டின் காரணமாகப் பெண்களே பெண்களுக்கு எதிரானவர்களாக உள்ளார்கள். இது பெண்ணியத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் தடையாகவே உள்ளது. பெண்ணியம் அதன் தொடக்க நிலையில் இருப்பவர்களை முழுமையான பெண்ணியவாதிகளாக மாற்றும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. அதற்காக பெண்களைப் பொருளாதாரத்தில் தன்னிறைவு கொண்டவர்களாக மாற்றும் முயற்சியைப் பெண்ணியம் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது எனலாம்.

## 5.2 வாழ்விடச் சூழல்

இலக்கியங்களின் உருவாக்கத்திற்குச் சூழல் மிகவும் இன்றியமை-யாததாகும். அமைதியான சூழல் படைப்பாளர்களுக்கு தூண்டுகோளாக அமையும். படைப்பின் தரத்தையும் படைக்கும் திறனையும் நிர்ணயம் செய்யக் கூடிய சக்தி சூழலுக்கு உண்டு. சில வேளைகளில் வன்முறையான சூழலில் கூட படைப்புகள் உருவாகும். அவ்வாறு உருவாகும் படைப்பானது அப்போதைய வன்முறைச் சம்பவங்களைப் படைப்பின் மூலம் வெளிப்படுத்துவதாக அமையும். பொதுவாக “இலக்கியங்கள் தாம் உருவான அந்தந்தக் காலச் சமுதாயத்தையும் எதிர்பார்க்கப்படும் கற்பனைச்

சமுதாயத்தையும் சுட்டிக்காட்டுகின்றன".[20] இதனால் இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி எனப்போற்றப்படுகின்றன.

இலக்கியப் படைப்பாளர்கள் சமுதாயக் கருத்துகளையும் கொள்கைகளையும் இலக்கியங்களில் எடுத்துரைக்கின்றார்கள். அவ்வாறு எடுத்துரைக்கும் போது படைப்பாளர்களின் அனுபவங்கள் அவர்களின் படைப்புகளில் இடம் பெறுவது தவிர்க்க இயலாததாகும். இவ்வாறான படைப்பாளர்களின் அனுபவங்கள் ஒவ்வொருவருக்கும் மாறுபாடு உடையதாகவே இருக்கும். இதனால் படைப்பாளர்களின் அனுபவக் கருத்துகள், சமுதாயக் கருத்துகளை மாறுபட்ட தன்மையுடையதாக ஆக்கிவிடும் ஆபத்தான நிலை ஏற்படும் வாய்ப்பும் உள்ளது. இதனால் இலக்கிய உருவாக்கத்தின் சூழலையும் அதன் மூலம் படைப்பாளருக்கான அனுபவத்தையும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம் ஆகும். அது இலக்கியம் குறித்த உண்மைகளை முழுமையாக அறிந்து கொள்ள உதவும்.

பெண்ணியம் அதன் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் முழுமையாக அதன் வாழ்விடச் சூழலில் இருந்தே பெற்று வந்துள்ளது. இதனால் அதன் கொள்கைகள் பொதுத் தன்மைகளை விட மாறுபட்ட தன்மைகளையே அதிகமாகக் கொண்டுள்ளது எனலாம். பெண்ணியப் போராட்டவாதிகளும் பெண்ணிய இலக்கியவாதிகளும் வெவ்வேறான சூழலில் வாழ்பவர்கள். அவர்கள் வெளிப்படுத்தும் பெண்ணியக் கருத்துகளில் அவர்களின் வாழ்க்கைப் பிரதிபலிப்பு இடம் பெறுகின்றது. இதனால் அவர்களின் கொள்கைகள், போராட்டங்கள் கூட சில நேரங்களில் சமூகத்தால் ஏளனம் செய்யப்படுகின்றன.

வாழ்விடச்சூழல் காரணமாக வெளிப்படும் கருத்துகள் பெண்ணியப் படைப்பாளர்களுக்குள் மாறுபட்ட கருத்தை ஏற்படுத்துகின்றன. இது மோதலாகவும் வெளிப்படுகின்றது. இது போன்ற மோதல்கள் ஆய்வுகளுக்கும் வழியேற்படுத்திக் கொடுக்கின்றன என்பதும் ஒத்துக்கொள்ள வேண்டிய கருத்தாகும்.

வாழ்விடச் சூழல், வாழ்க்கை முறையை மாற்றி விடும் தன்மை கொண்டது. சமுதாயமே மனிதனை உருவாக்குகின்றது எனலாம். பாசுரம் பாடிய ஆண்டாள் தனது வாழ்க்கைச் சூழலின் காரணமாகவே கண்ணனின் பக்தையாகின்றார். அரசியல் ஈடுபாடு கொண்ட தந்தையான ஜவகர்லால் நேருவின் மகளான அன்னை இந்திரா காந்திக்கு அவரது வாழ்க்கைச் சூழலே அவரை அரசியல் தலைவராக உயர்த்தியது. நேருவின் மனைவியும் இந்திராகாந்தியவர்களின் தாயாருமான கமலா அம்மையார் இளம் வயதில் இறக்க நேர்ந்தது. இதனால் சிறு குழந்தையான இந்திரா பிரியதர்சினியை தந்தையான நேரு அரசியல் நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் உடன் அழைத்துச் சென்றார். இதுவே இந்திராகாந்தி அவர்கள் அரசியலில் ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக அமைந்தது.

பெண்கள் இறைவனோடு கலப்பதற்கும் அரசியல் தலைமையைப் பெறுவதற்கும் வாழ்விடச் சூழல் காரணமாக இருந்துள்ளது. அதுபோல் பெண்கள் சமுதாயத்தின் கீழான நிலையை அடைவதற்கும் சூழல் காரணமாக அமைகின்றது. பெண்ணை தாயே தவறான பாதைக்கு அழைத்துச் செல்லும் நிலையும் ஏற்படுகின்றது. தாயின் பாதையிலேயே தொடர்ந்து செல்லும் வழித் தோன்றல்களும் உருவாகின்றார்கள்.

காதல் திருமணம் செய்த பெற்றோர்களின் குழந்தைகள் காதல் திருமணம் செய்வதையே விரும்புகின்றார்கள். இதனால் வாழ்விடச் சூழல், மனிதர்களின் வாழ்வில் எதிரொலிப்பது தவிர்க்க இயலாத ஒன்றாகிறது. அதுபோல் இதன் வெளிப்பாடும் ஒவ்வொருவருக்கும் மாறுபடும் தன்மை கொண்டதாகவே இருக்கிறது. மாறுபாடு கொண்டதாக இருப்பதால் அக்கருத்துகள் பொய்யானவை என்றோ தவறானவை என்றோ கருத முடியாது. அவை உண்மை சார்ந்ததாகவே அமைவதைக் காணலாம்.

பெண்ணியச் சிந்தனையாளர்களும், இலக்கியவாதிகளும் வாழ்விடச் சூழலின் அடிப்படையில் மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களாக உள்ளார்கள். மாறுபட்ட கருத்துகள் பொதுவாக ஒன்றையொன்று மறுப்பதாக

ஆகாது. வெளிப்படும் இடத்தையும் சூழலையும் கொண்டு ஆய்வுக்குட்படுத்தும் போது அவை அனைத்தும் உண்மையானவைகளாகவே இருக்கும்.

பெண்ணியப் படைப்பாளர்கள் உரிமைகளுக்காகப் போராடு-கின்றார்கள். உடலியல் ரீதியாகவும் உயிரியல் ரீதியாகவும் பெண்கள் ஆண்களை விட மாறுபாடு கொண்டவர்கள். இது பெண்களுக்குப் பின்னடைவையே கொடுத்துள்ளது. இது இயற்கை, பெண்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் குறைபாடாகும். இது இறைவனின் அநீதி என்ற கருத்தும் உள்ளது. இக்கருத்தை முன்னிறுத்திப் பெண்ணியலாளர்கள் இறை மறுப்பாளராக மாறவில்லை. ஆனால் பெண்ணியலாளர்களில் இறை மறுப்பாளர்களும் உள்ளார்கள்.

பெண்ணியப் படைப்பாளர்களில் ஒருவரான ஓவியா இறை மறுப்பாளர் ஆவார். இதற்கு அவரது வாழ்க்கைச் சூழலே காரணம் என்பதையும் அவர் வெளிப்படுத்துகின்றார். அவரது தாத்தாவும் பாட்டியும் இறைமறுப்பாளர்கள். இதனால் இவரும் இறைமறுப்பாளர் ஆகின்றார். அவரது வாழ்க்கை அனுபவத்தைக் குறிப்பிடும் போது "எனக்கு முற்றிலும் வேறுபட்ட ஒரு வளர்ப்புச் சூழல் இருந்தது. பொதுவாக இன்றைக்கும் நிறையப் பெண்களுக்குக் கிடைக்காத ஒரு ஆரோக்கியமான அபூர்வமான வளர்ப்புச் சூழல் எனக்கு இருந்தது"[21] எனக் குறிப்பிடுகின்றார்.

சமுதாயம் தொடர்பில்லாத செயல்களைக் கூட ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையது. "பொதுவா நம்ம சமுதாயத்தில் ஒருவிஷயத்தைக் குடும்பப்பழக்கம் அப்படீன்னு சொன்னா ஒத்துக்குவாங்க, அது அவங்களுக்கு உடமையல்லாத விஷயமா இருந்தால் கூட"[22] என்ற கருத்து, சூழலின் ஆளுமையை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

வாழ்விடச் சூழல் ஒவ்வொருவரின் வாழ்விலும் அதன் தாக்கத்தை ஏற்படுத்திவிடும். படைப்பாளனுக்கு இத்தாக்கம் அதிகமாக இருக்கும். சமுதாயக் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வாழ்விடச் சூழல் காரணமாக வெளிவர

முடியாமல் இருக்கும் நிலையை இங்கே ‘கருவறை வாசனை’ கவிதை நூலில் வெளிப்படுத்துகின்றார். கவிஞர் கனிமொழி

*“அவள் உழைத்த காசில்*
*தினம் குடித்துவிட்டு வந்து*
*அவளை அணைக்கும் கணவனை*
*பத்தினிமார் வரிசையில் இடமின்றிப்*
*போகுமா என நிதம்*
*பொறுத்துக் கொள்வாள்”*[23]

விருப்பமில்லாத வாழ்க்கையை சூழல் காரணமாகப் பெண் வாழ்கின்றாள் என்பதைக் கவிஞர் வெளிப்படுத்துகின்றார்.

கிராமச் சூழலில் வளர்ந்து நகர் வாழ்க்கைக்கு மாறிவிட்ட பின்னர் ஏற்படும் அனுபவங்களை வெளிப்படுத்துகின்றார் கவிஞர் தமிழச்சி தங்கப்பாண்டியன்.

*“இருக்கன்குடி மாரியம்மான் கோவிலின்*
*சுடுமணலைக் கால் மாற்றி*
*ஓடிக் கடந்து*
*நாம் தோண்டிக் குடித்த*
*பால்யத்தின் ஊற்று*
*சுரந்தபடியே இருக்கின்றது*
*கான்கிரீட் தளங்களில்*
*காலணி அதிராதவாறு வந்து*
*நீ என்னைச் சந்திக்கும்*
*ஒவ்வொருமுறையும்*
*பாலிதீன் பைகளின்*
*சக்கைகலெனச் சலனமற்று உரையாடுகிறாய்*
*குழந்தைமையின் வசீகரத்தை மறைக்கும் உன்*
*யெவனத்தின் ஒப்பனையைக் கலைக்க*
*வெயிலாற நடக்கலாம்*

*வெளியே வா என்கிறேன்*

*உன் திடுக்கிடுதலில்*

*தொலைந்து போனது நம்*

*கிராமத்து வெயில்"*[24]

கிராமியச் சூழலில் வெளியுலகை முழுமையாக வலம் வந்த வாழ்வு கிடைத்தது. ஆனால் நகரச் சூழல் வாழ்வு வீட்டுக்குள்ளே அடைக்கப்பட்டதாக உள்ளது என விளக்குகின்றார்.

வாழ்க்கை முறை ஒவ்வொருவருக்கும் மாற்றம் உடையதாகவே உள்ளது. இளமையின் வாழ்க்கை வேகமுடையதாக இருக்கும். இல்லற பந்தத்தில் கட்டுண்ட பின்னர் வாழ்க்கையின் போக்கு முழுமையாக மாறுபட்டுவிடும். படைப்பாளிகளுக்குப் படைப்பின் நோக்கமும் கொள்கையும் மாற்றம் பெற்றுவிடும். பெண் படைப்பாளிகளுக்கு இல்லற வாழ்வு அவர்களின் படைப்புத்திறனை மாற்றும் வல்லமை கொண்டது. படைப்-பாற்றலைத் தடைசெய்துவிடும். பெண்ணியப்படைப்பாளர்களின் நிலை இன்னும் மோசமானதாக இருக்கும். அவர்களைக் காட்டிலும் அதிகமான தாக்குதலை எதிர்கொள்ளும் நிலையைக் கொண்டவர்கள், பெண்ணியத்தைப் பெண்மொழியில் பேசும் பெண்ணியப்-படைப்பாளர்கள்.

பெண்ணியப் படைப்பாளர்கள் பலர் அவர்களது படைப்பின் காரணமாக இல்லறவாழ்வை இழக்கும் நிலைக்கு ஆட்பட்டுள்ளார்கள். இலக்கிய ஆர்வமும் எழுத்தும் கணவர்களால் தடைசெய்யப்படுகின்றது. அதை மீறும், பெண் மொழியில் படைப்புகளை உருவாக்கும் பெண்ணியப் படைப்பாளர்களின் வாழ்க்கை பறிக்கப்படுகின்றது கட்டாயமாக இல்லறத்தில் இருந்து விலக்கி வைக்கப்படுகின்றார்கள். சமூகத்தால் ஒழுக்கம் கெட்டவர்கள் என்று புறக்கணிக்கப்படுகின்றார்கள். இது போன்று சமூக எதிர்ப்புகளைத் தாண்டி நின்றபோதும் குடும்பச்சுமைகள் அவர்களை வலுவிழக்கச்-செய்கின்றன. இதை தனது கவிதையில் பதிவு செய்துள்ளார் கவிஞர் சல்மா,

“எனக்குத் தெரியும்
எனதிந்தக் காரியங்களையும்
ஓயாத பறத்தல்களுடன்
குழந்தைகள் மீளுமுன்
முடிக்க வேண்டுமென்பதும்

இருந்தும்
இன்னும்கூட நிகழவில்லை
இது எனது இடமென்கிற பிடிமானமும்
ஆதி காலக் குகைவெளியிலிருந்தென்
வெளியேற்றமும்”[25]

என்ற இக்கவிதை, குழந்தைகளுக்காக வாழ்வதையும் உரிமையில்லாமல் வாழும் வாழ்க்கையையும் வெளிப்படுத்துகின்றது.

வாழ்விடச்சூழல் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களுக்குப் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஒரு நிகழ்வு உயர்ந்த நிலையில் இருப்பவர்களுக்குப் பொழுதுபோக்கு; அதுவே தாழ்ந்த நிலையில் இருப்பவர்களுக்கோ வாழ்க்கை. இதைக் கவிஞர் தனது கவிதையில் வெளிப்படுத்துகின்றார்.

“மழை உனக்கு
ஜன்னலுக்கு
வெளியே பெய்கின்றது
எனக்கு எங்கள்
பொழப்பு
மேலேயே பெய்கிறது”[26]

என்ற கவிதையின் மூலம் இதை அறியலாம்.

“தெரு வாசலில் வெளிச்ச
சட்டத்துக்கு அப்பால் நின்று
குரலெடுப்போம்

*அம்மா அன்னம் போடுங்க*

*கூடப்படிக்கும் பொடுசுகள்*

*எட்டிப்பார்த்துவிட்டுச்செல்லும்”*[27]

என்ற கவிதையில் கவிஞரின் வாழ்க்கையும் அவரது நிலையும் வெளிப்படுகின்றது. இதில் அவரது மன வலியையும் உணரமுடிகின்றது.

குறைவுடையதாகக் கருதப்படும் தொழிலைச் செய்பவர்களும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களும் அத்தொழிலை வெளியில் சொல்ல முடியாமல் தவிக்கும் நிலையை வெளிப்படுத்துகின்றார் கவிஞர் சுகிர்தராணி.

*“அப்பாவின் தொழிலும் ஆண்டு வருமானமும்*

*சொல்லமுடியாமல்*

*வாத்தியாரிடம் அடி வாங்குவேன்*

*தோழிகளற்ற*

*பின்வரிசையிலமர்ந்து*

*தெரியாமல் அழுவேன்”*[28]

என்ற இக்கவிதையில் கவிஞர் தனது சொந்த அனுபவத்தை வெளிப்படுத்துகின்றார்.

படைப்பாளர்கள் வாழ்விடச் சூழலை படைப்புக்களின் மூலம் படம்பிடிப்பவர்கள். சொந்த வாழ்க்கையின் வறுமையை கவிதையில் வெளிப்படுத்துகின்றார் கவிஞர் இளம்பிறை

*“அம்மா*

*அடுப்பைப் பற்றவை*

*குளிராவது காயலாம்”*[29]

என்ற இக் கவிதையில் கவிஞரின் வாழ்வும், வாழ்க்கைச் சூழலும் வெளிப்படுகின்றது. கிராமச் சூழலில் வாழ்ந்த கவிஞர் பொருளாதார நிலையில் உயர்வுபெற்றவுடன் தனது இருப்பிடச் சூழலை மாற்றுகின்றார். கிராமத்தில் இருந்து நகருக்குச் சென்று வாழ்வைத் தொடர்கின்றார்.

ஆனாலும் அவரது மனம் கிராமச் சூழலில் இருந்து வெளிவர மறுக்கின்றது. நகர்ப்புற வாழ்க்கை அவருக்கு மகிழ்வைத் தரவில்லை என்பதை அறிய முடிகின்றது. இதைத் தனது கவிதையில் பதிவு செய்கின்றார் கவிஞர் இளம்பிறை

*“மாநகர் வந்து*
*மாதங்கள் பல ஓடிவிட்டன*
*பொருட்களை*
*ஏற்றிவந்து விட்டேன் அப்போதே.*
*வராமல் அடம்பிடித்துக் கொண்டிருக்கும்*
*இந்த மனசைத்தான்*
*எப்படிக் கொண்டு வருவதென*
*தெரியவில்லை”*[30]

என்ற இக்கவிதை கிராமச் சூழலில் கவிஞரின் மனம் ஒன்றி வாழ்ந்த வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றது. கவிஞர் பாலபாரதி தனது கவிதையில் ஒரு கிராமியத் தந்தையை கண்முன்பாக நிறுத்துகின்றார்.

*“வெற்றிலைச் சாறு தெரிக்க*
*அப்பா கொடுத்த*
*முத்தத்தில்*
*இப்போதும் மணக்கிறது*
*அங்கு விலாஸ் புகையிலையும்*
*அப்பாவின் வாசனையும்”*[31]

என்ற இக் கவிதை அவரது வாழ்வியலைக் கவிதையாகவே வெளிப்படுத்துவதைப் பார்க்கலாம்.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரான கவிஞர் சுகிர்தராணி தனது கவிதைகளில் தனது வாழ்க்கைச் சூழலைப் பதிவு செய்கின்றார். தான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்பதையும் கவிதையில் பதிவு செய்கின்றார். அவரது வாழ்க்கைச் சூழலை,

"மெல்லிய
புலால் நாற்றம் வீசுகின்ற
நானும்
தசைகளை முற்றாகப்
பிய்த்தெடுத்த எலும்புகள் தொங்கும்
என் வீடும்
கொட்டாங்கச்சியில் தோலைக்கட்டி
பறையொலி பழகும்
விடலைகள் நிறைந்த
என் தெருவும்
ஊரின் கடைசியில் இருப்பதாக
நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்
நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்
முதலில் இருப்பதாக"[32]

என்ற கவிதையில் முழுமையாகப் பதிவுசெய்கின்றார். கவிஞரின் இக் கவிதை அவரது வாழ்விடச் சூழலின் காரணமாக எழுந்தது. இக் கவிதையை வேறு சூழலில் வாழும் எவரும் எழுதமுடியாது. மாறுபட்ட சிந்தனையின் மூலம் பலவீனங்களைப் பலமாக மாற்றக் கூடியவர்கள் படைப்பாளிகள் என்பதையும் கவிஞர் இங்கே பதிவு செய்துள்ளார் எனலாம்.

வாழ்விடச் சூழலின் காரணமாகப் பழகிய பல செயல்களில் இருந்து எளிதாக விடுபட முடியாது என்பதைப் பதிவு செய்கின்றார் கவிஞர் வைகைச் செல்வி,

"வெள்ளைத் தேங்காயும்
கருப்பு மிளகும்
பச்சை மிளகாயும்
சிவப்பு வற்றலுமாய்
தாள லயத்தோடு
அம்மா அரைக்கையிலே
ஆத்துக்கு அக்கரையில் அழகருக்கு வாயூறும்

*இன்றோ*

*அவசர உலகத்தில்*

*அடுக்கு மாடிக் குடியிருப்பில்*

*பதுங்கிக் கிடப்பதற்கு*

*முற்றமோ புழக்கடையோ*

*ஒதுங்கிக் கிடப்பதற்குத் திண்ணையோ இல்லாமல்*

*கவனிக்க ஆளின்றி*

*காய்ந்திருக்கும் வெறும்கல்லாய்*

*வயோதிகம் போல் அம்மியும்*

*ஆயினும் ஓர் நாள்*

*மழைநாள் இரவில்*

*மின்சாரம் தடைப்பட்டுச்*

*சிம்னி கதகதப்பில்*

*ராச்சோறு சுவைப்பதற்காய்*

*பருப்புத் துவையலைக்*

*கை வலிக்க அரைக்கையிலே*

*வீடெல்லாம் மணத்தது*

*அம்மாவின் வாசனையில்”*[33]

இக் கவிதையில் மாடிவீட்டு வாழ்க்கையில் ஏற்படும் இழப்புகளைப் பட்டியலிடுகின்றார். முற்றம், புலக்கடை இல்லை கவனிக்க ஆளில்லை என்ற தனது ஏக்கத்தையும் பதிவு செய்துள்ளார் கவிஞர்.

கிராமத்து வாழ்க்கையும் சுதந்திரமும் கவிஞர்களுக்கு மகிழ்ச்சி-யூட்டுவதாக உள்ளது. ஆனால் அங்கும் தாழ்ந்த நிலையில் வாழும் கவிஞர்கள் அந்த வாழ்க்கைச் சூழலை வெறுப்பவர்களாகவே உள்ளார்கள். நகர்வாழ்வும் கிராமிய வாழ்வும் மாறுபட்ட அனுபவங்களையே படைப்-பாளர்களுக்கு வழங்குகின்றன.

வாழ்விடச் சூழல் உயர்வானதாக இருந்தால் அது பெருமையோடு வெளிப்படும். அதேபோல் தாழ்வான நிலையில் இருந்தால் அது மனத்தின்

துயரத்தை வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றது. இதுபோல் வாழ்விடச் சூழலைப் படைப்பாளர்கள் மாறுபட்ட தன்மையில் வெளிப்படுத்துகின்றார்கள்.

## 5.3 தொகுப்புரை

5.3.1 பெண்ணிய இயக்கங்கள் அது தோன்றிய காலக்கட்டம் முதலே முரண்பாடுகளையும் மாறுபட்ட கருத்துக்களையும் கொண்டதாக அமைந்தது. பெண்களின் வாழ்வை சுதந்திரமாகவும் விடுதலையுணர்வுடனும் அமைக்கப்பாடுபட்டது.

5.3.2 சமூக அமைப்பில் ஆண்களை ஒத்துக் கொண்டு விடுதலைக்குப் போராடும் மித வாதப் பெண்ணியவாதிகளும் ஆண்களை மறுதலித்து விட்டு, மனித மறுஉற்பத்தி தடைபட்டாலும் கூட, ஒருபால் உறவை ஊக்குவிக்கும் தீவிரவாதப் பெண்ணியவாதிகளும் இணைந்து பெண் விடுதலைக்குப் போராடினர்.

5.3.3 பெண்ணிய அமைப்புகள், கொள்கை அளவில் பல்வேறு வேறுபாடுகள் உடையதாகக் காணப்படும் அதே வேளையில், பொருளாதாரம் குறித்தும் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டிருந்தன. பெண்களின் பொருளாதார நிலைகுறித்த கருத்துக்களை திலகபாமா, குளோரி கிறிஸ்டோபர், விஜிகலா, சுகிர்தராணி, வைகைச் செல்வி போன்றோர் தங்கள் கவிதைகளில் பதிவுசெய்துள்ளனர்.

5.3.4 பெண்கள் செல்வச் செழிப்பில் இருந்தாலும் கட்டுப்பாடுகளில் இருந்து வெளிவரத் துடிப்பவர்களாகவும்; தானே பொருளீட்டினாலும் கணவனுக்கு அடிமையாக இருப்பதையும் உயர்ந்த பொறுப்புகளுக்குச் சென்றாலும் அடுப்படியில் கிடக்க வேண்டியிருக்கிறது என்பதையும்; பொருளியல் உயர்வு இல்லாததால் சுத்தம் சுகாதாரம் முதலியவற்றைக் கடைப்பிடிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் பெண் படைப்பாளர்கள் பலரின் கவிதைகள் காட்டுகின்றன.

5.3.5 பெண்ணியக் கட்டுப்பாடு என்பது நகரம், கிராமம் என்ற வேறுபாடில்லாது நடக்கிறது. பொருளியல் தேவையின் அதிக அழுத்தத்தால், பெண் சிசுக் கொலை எனும் சமூகக் கொடுமை நடப்பதை படைப்புகள் வெளிப்படுத்துகின்றன.

5.3.6 இலக்கியங்கள் படைப்பாளிகளின் வாழ்விடச் சூழலுக்கு ஏற்ப மாறுபடும் என்பதைப் பெண்ணியப் படைப்பாளர்களின் படைப்புகள் காட்டுகின்றன. பெண்ணியப் படைப்பாளர்களுக்கிடையிலான கருத்தியல் வேறுபாட்டை வாழ்விடச் சூழல் தீர்மானிப்பதாகவுள்ளது.

5.3.7 வாழ்விடச் சூழலின் காரணமாகப் பெண் விருப்பமில்லாத வாழ்க்கை வாாழ்வதையும்; நகர வாழ்க்கைக்கு மாறிவிட்ட பிறகு பெண்களின் சிந்தனையில் ஏற்படும் மாற்றத்தையும்; இல்லற வாழ்வு பெண்ணின் சுதந்திரத்தை, படைப்புணர்வை அழித்து விடுகிற தன்மையையும்; சமூகக் கட்டுப்பாடுகள் பலவற்றால் ஒழுக்கக் கோட்பாட்டுக்குள் சிக்கி பெண்கள், குழந்தைகளுக்காக வாழ்வதையும் பெண் கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் படைத்துக் காட்டியுள்ளனர்.

5.3.8 பெண்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வியலை அவர்களது வாழ்விடச் சூழல் தீர்மானிக்கிறது. பெண், தலித் போன்ற காாரணங்களால் வேறுபடுத்திப் பார்க்கும் போக்கு பெண்களுக்குள்ளேயே இருப்பதை சுகிர்தராணி போன்றோரின் கவிதை சுட்டிக் காட்டுகிறது.

# குறிப்புகள்

1. நா. ஜெயபாலன், பெண்ணினம் ஓர் ஆய்வு, ப.19.
2. வாசுகி ஜெயரத்தினம், பெண்ணியச் சுவடுகள், ப.51.
3. இரா. ரெங்கம்மாள், சி.வாசுகி, பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், ப.26.
4. மேலது, ப.26.
5. மேலது, ப.27.
6. நா. ஜெயபாலன், மு.நூ., ப.54.
7. க. பஞ்சாங்கம், பெண் மொழி படைப்பு, ப.113.
8. சந்திரகாந்தன் (தொ.ஆ), பாரதியார் கவிதைகள், ப.360.
9. திலகபாமா, எட்டாவது பிறவி, ப.26.
10. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் (தொ.ஆசி), எத்திராஜ் மகளிர் கல்லூரி, தமிழ்க் கவிதைகளில் பெண்ணியம், ப.73.
11. மேலது, ப.74.
12. ராஜமார்த்தாண்டன் (தொ.ஆ), காலச்சுவடு பெண்படைப்பாளர்கள் 1994-2004, ப.326.
13. வைரமுத்து, வைரமுத்து கவிதைகள், ப.146.
14. சுகிர்தராணி, அவளை மொழி பெயர்த்தல், ப.54.
15. சூரியசந்திரன் (தொ.ஆ), அறையின் இருளில் காடு மணத்துக்கிடந்தது, ப.35.
16. சல்மா, பச்சைத் தேவதை, ப.44.
17. கனிமொழி, அகத்திணை, ப.29.

18. தமிழச்சி தங்கப்பாண்டியன், வனப்பேச்சி, ப.49.

19. இரா. ரெங்கம்மாள், சி. வாசுகி, மு.நூ., ப.26.

20. என்.கே. அழகர்சாமி, பெரியபுராணத்தில் திருக்குறளின் தாக்கம், ப.30.

21. ராஜமார்த்தாண்டன் (தொ.ஆ), மு.நூ., ப.219.

22. மேலது, ப.221.

23. கனிமொழி, கருவறை வாசனை, ப.28.

24. தமிழச்சி தங்கப்பாண்டியன், மு.நூ., ப.60.

25. சல்மா, மு,நூ., ப.32.

26. ராஜமார்த்தாண்டன் (தொ.ஆ), மு.நூ. ப.312.

27. சுகிர்தராணி, மு,நூ., ப.49.

28. சுகிர்தராணி, இரவு மிருகம், ப.32.

29. சூரியசந்திரன் (தொ.ஆ), மு.நூ., ப.13.

30. மேலது, ப.15.

31. மேலது, ப.114.

32. சுகிர்தராணி, மு.நூ., ப.31.

33. சூரியசந்திரன் (தொ.ஆ), மு.நூ., ப.39